<u>சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு</u>
முன்னிலை: D.மோகன்குமார்.,B.Com.,M.L.,
சார்பு நீதிபதி, திருச்செங்கோடு.
2024–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 03–ம் சனிக்கிழமை
<u>IA No.02/2020– ன் OS No. 46/2020</u>

ஆர்.ரங்கநாதன் – மனுதாரர்/வாதி

/எதிர்/

01. எம்.ஜெயா,
02. எம்.ரீனா,
03. எம்.நளினாதேவி – எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 03.02.2024 ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும் மற்றும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உத்தரவு</u>

01. மனுதாரர்/வாதி தரப்பில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை தீர்ப்புக்கு முன்பு ஜப்தி செய்ய உத்தரவு பிறப்பிக்க கோரி உவிமுச வகுமுறை 38 விதி 5 மற்றும் 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02. <u>மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u>

(i) மனுதாரர்/வாதி அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக ரூ.7,00,000/– தொகையை வசூல் செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இறந்து போன முத்துசாமி என்பவர் கடந்த 18.02.2017 ம் தேதியில் ரூ.7,00,000/–த்தை கடனாக பெற்றுக் கொண்டு மாதம் ஒன்றுக்கு 12 சதவீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு அதற்கு ஆதாரமாக ஒரு கடனுறுதிச் சீட்டு கொடுத்தார். கடன் வாங்கிய பின்னிட்டு 18.02.2017 ம் தேதியன்றே மேற்படி முத்துசாமி தற்கொலை செய்து கொண்டார். 1–ம் பிரதிவாதி, இறந்துபோன முத்துசாமியின் மனைவி மற்றும் 2, 3 பிரதிவாதிகள் இறந்துபோன முத்துசாமியின் மகள்கள் ஆவார்கள். மேற்படி இறந்துபோன முத்துசாமிக்கு திருச்செங்கோடு கிராமம் சர்வே எண். 282/1 உள்ள சொத்துக்களை 1 முதல் 3 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள். வாதி பலமுறை கடன்தொகையை பிரதிவாதிகளிடம் திருப்பி செலுத்தவில்லை. தற்போது மேற்படி சொத்துக்களை 3–ம் நபருக்கு விற்பனை செய்ய

முயற்சித்து வருவதாக திருச்செங்கோடு, கொல்லப்பட்டி, கதவு எண்.91,TNHB காலனியில் வசிக்கும் அர்ஜீனன் மகன் சக்திவேல் என்பவர் மூலம் தெரிய வந்தது. எனவே சொத்துக்களை தீர்ப்புக்கு முன் பற்றுகை செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

03. 1ம் <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையை 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர் தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டஎதிர்வழக்குரையின் சுருக்கம்</u>.

(i) மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் எதிர்மனுதாரர் ஒப்புக் கொள்ளும் சங்கதிகள் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக ரூ.7,00,000/- தொகையை வசூல் செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தவறு. இறந்து போன முத்துசாமி என்பவர் கடந்த 18.02.2017ம் தேதியில் ரூ.7,00,000/-த்தை கடனாக பெற்றுக் கொண்டு மாதம் ஒன்றுக்கு 12சதவீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு அதற்கு ஆதாரமாக ஒரு கடனுறுதிச் சீட்டு கொடுத்தார். கடன் வாங்கிய பின்னிட்டு 18.02.2017ம் தேதியன்று இறந்துதுவிட்டார் என்பதும் தவறு. இறந்த போன முத்துசாமியின் சொத்துக்களில் 1/2 பங்கு மட்டும 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், மீதமுள்ள சொத்து கூட்டுக் குடும்ப சொத்து என்றும், 2, 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது. ஆகவே, தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய இயலாது. எனவே, இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

04. இருதரப்பிலும் சாட்சியங்கள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

05. மனுதாரரின் மனு, எதிர்மனுதாரரின் பதிலுரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய சங்கதி என்னவெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதாகும்.

<u>06. தீர்வு</u>

(i) மனுதாரர் பிரதான வழக்கில் வாதி ஆவார். எதிர்மனுதாரர்கள் பிரதான வழக்கில் பிரதிவாதிகள் ஆவார். கடனுறுதிசீட்டு அடிப்படையில் தொகை கோரி பிரதான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதான வழக்கு தாக்கல் செய்த சமயத்திலேயே தீர்ப்புக்கு முன்பு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் சொத்தை ஜப்தி செய்யக் கோரி வாதி தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தீர்ப்புக்கு முன் சொத்தை ஜப்தி செய்வது சம்மந்தமாக கீழ்க்கண்ட

மாண்பமை உச்சநீதிமன்ற முன் தீர்ப்புரையில் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது.

08. The Hon'ble Supreme Court of India in Raman Tech. & Process Engg. Co. Vs Solanki Traders reported in 2008 (2) SCC 302 had held as follows;

"5.The power under Order 38 Rule 5 CPC is drastic and extraordinary power. Such power should not be exercised mechanically or merely for the asking. It Should be used sparingly and strictly in accordance with the Rule. The purpose of Order 38 Rule 5 is not to convert an unsecured debt into a secured debt. Any attempt by a plaintiff to utilize the provisions of Order 38 Rule 5 as a leverage for coercing the defendant to settle the suit claim should be discouraged. Instances are not wanting where bloated and doubtful claims are realised by unscrupulous plaintiffs by obtaining orders of attachment before judgment and forcing the defendants for out of court settlement, under threat of attachment."

ii). மேற்சொன்ன முன்தீர்ப்பின்படி தாவா தொகைக்கு பிணையம் அளிக்க உத்தரவிடுவதும் மற்றும் தீர்ப்புக்கு முன்பு சொத்துக்களை ஜப்தி செய்வதும் அசாதாரண பரிகாரம் ஆகும். அசாதாரண பரிகாரங்களை வழங்கும்பொழுது நீதிமன்றம் சட்டவிதிகளை கண்டிப்பான முறையில் கடைபிடிக்கவேண்டும். எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மனுச் சொத்தினை விற்பனை செய்ய முயற்சி செய்கிறார்கள் என்று மனுவில் சொல்லியுள்ள காரணத்தினாலேயே தீர்ப்புக்கு முன்பு சொத்தினை ஜப்தி செய்ய உத்தரவிட இயலாது.

iii) இந்த மனுவில் சொத்துக்கள் இந்த எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பதற்கு வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளார். மேற்சொன்ன வில்லங்கச் சான்றிதழை மட்டும் வைத்து மனுச் சொத்து காலம் சென்ற முத்துசாமியின் சொத்து என தீர்மானிக்க இயலாது. இந்த மனுவில் எதிர்மனுதாரர்கள், மனுதாரரிடமிருந்து நேரிடையாக கடன் பெற்றவரல்ல. கடன் பெற்றதாக சொல்லப்படும் முத்துசாமியின் வாரிசுகள் ஆவார். மேலும், எதிர்மனுதாரர்கள் அவர்களின் பதிலுரையில் மனுச் சொத்து முத்துசாமியின் தனிப்பட்ட சொத்தல்ல. அது கூட்டுக் குடும்ப சொத்து என தெரிவித்துள்ளார். இந்தநிலையில், மனுச் சொத்து காலம் சென்ற முத்துசாமியின் தனிப்பட்ட சொத்துதான் என்பதை நிரூபிக்கும் விதமாக அவர் பெயரிலுள்ள சொத்துக்கள் பற்றிய ஆவணங்களை மனுதாரர் தாக்கல் செய்யவேண்டும். ஆனால்,இந்த மனுவில் உரிமைமூலத்தை நிரூபிக்கும் விதமாக எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. எனவே, மனுதாரர் மனுச் சொத்து காலம் சென்ற முத்துசாமியின் தனிப்பட்ட சொத்து என்பதை மெய்ப்பிக்கவில்லை. மேலும், இந்த மனுவில் தனி நபர் சாட்சிகளை விசாரணை செய்து தீர்ப்பு மனுதாரருக்கு சாதகமாக பிறப்பிக்கப்படும் பட்சத்தில் அதை நிறைவேற்றுகை தடை செய்யும் எண்ணத்துடன் அல்லது கால தாமதப்படுத்தும் எண்ணத்துடன்

விற்பனை செய்ய முயற்சித்து வருகிறார் என்ற சங்கதியை உரிய தனி நபர் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் மனுதாரர் நிரூபிக்கவில்லை. எனவே மனுவை அனுமதிப்பதற்கான காரணம் மனுவில் இல்லை. ஆகையால் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

முடிவாக, மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டசருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2024-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 03-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

D MOHANKUMAR
Digitally signed by D MOHANKUMAR
Date: 2024.02.03 06:26:25 +0530

சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்–</u> இல்லை.

D MOHANKUMAR
Digitally signed by D MOHANKUMAR
Date: 2024.02.03 06:26:33 +0530

சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு.
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 02/2020 ன்
அ.வ.எண். 46/2020
நாள்.03.02.2024